பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 16 வியாழக்கிழமை 30.06.2022 கதிர் 128

## பொலிஸார் ஒருவர் சுட்டுத் தற்கொலை!

உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர், தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு, உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் கடவத்த - கோனஹேன பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமில் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

☞2

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து

## 726 கைதிகள் தப்பியோட்டம்; இதுவரை 599 பேர் சிக்கினர்



ஏனையோரைத் தேடும் வேட்டை தொடர்கின்றது

பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற கைதிகளில் இதுவரை 599 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர்

☞2

## வாட்டி வதைக்கின்றது வறுமை; மேலும் நால்வர் தமிழகத்துக்கு!

(ந.லோகதயாளன்)

இலங்கையிலிருந்து மேலும் 4 பேர் இன்று காலை தமிழகத்தைச் சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வறுமை தலைவிரித்தாடுகின்றது. இதையடுத்துப் பலர் இங்கிருந்து இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்குச் சட்டவிரோதமாகத் தப்பிச் செல்கின்றனர்.

இந்நிலையில், இன்று 4 பேர் இந்தியாவின் முக்கிய மாநிலமான தமிழகத்துக்குக் கடல் வழியாகச் சென்றுள்ளனர்.


வவுனியா மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த நால்வரே தமிழகத்தைச் சென்றடைந்துள்ளனர்.

இவர்களில் இரு ஆண்கள்,



☞2

## 3 நாள்கள் மட்டுமே சபை அமர்வுகள்!



ஜூலை மாதம் முதல் வார நாடாளுமன்ற அமர்வுகளை 4, 5, 6 ஆகிய திகதிகளில் மட்டும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று கூடிய நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை வாய்மூல கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன்,

☞2

# கோட்டா உடனே வீடு சென்றாலே நாட்டுக்கு விடிவு

சந்திரிகா அம்மையார் எடுத்துரைப்பு



**ஜனாதிபதிக் கதிரையில் கோட்டாபய ராஜபக்ஷ இருக்கும் வரைக்கும் இலங்கைக்குச் சர்வதேசம் உதவ முன்வராது. அதேவேளை, இந்தப் பொருளாதார நெருக்கடியும் தீராது மேலும் உக்கிரமடையும். எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலகி வீடு சென்றால்தான் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்.**

**- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

☞2

## மஹிந்த நலமுடன்

வதந்தியை நம்பாதீர்கள் என்கின்றனர் செயலர்கள்



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று சமூக வலைத்தளங்களில் வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது என அவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மஹிந்தவின் உடல் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது எனவும், அவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும்

☞2

## திருட்டு ஜோடி கைது!

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வீடுகள், கடைகளில் திருடப்பட்ட சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அதுமட்டுமின்றி அந்தப் பொருள்களுடன் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஒரு ஜோடியை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைதுசெய்தனர்.

பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் பதுளை

☞2

## அரசு மீது நம்பிக்கையை இழந்துள்ளது சர்வதேசம்

தற்போதைய அரசின் மீது தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக நம்பகத்தன்மை இல்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலையைத் தீர்த்துக்கொள்ள வெளிநாடுகளின் ஒத்துழைப்புக்களும் உதவிகளும் மிகவும் அவசியம். அதற்கு முன்னர் சர்வதேசத்திடம் நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்காக சர்வகட்சி அரசை நியமிக்க வேண்டும். இந்தச் செயற்பாடு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.



சு.க. சுட்டிக்காட்டு

ஆஸ்திரேலியாவிலிருந்து

## 46 இலங்கையர்கள் இன்று நாடு கடத்தல்

ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட 46 இலங்கையர்கள் இன்று நாட்டை வந்தடைந்தனர்.

அண்மையில், இலங்கையிலிருந்து சட்டவிரோதமாகப் படகு மூலம் பயணித்து ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்பட்ட குறித்த இலங்கையர்கள், ஆஸ்திரேலிய அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர்.

இதையடுத்து, நாடு கடத்தப்பட்ட அவர்கள், ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான விசேட விமானம் மூலம், இன்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சிலாபத்தைச் சேர்ந்த குறித்த நபர்கள், கட்டுநாயக்க விமான நிலையை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

☞2

# துப்பாக்கிச் சூட்டுக்களால் அதிரும் இலங்கை; ஒரு மாதத்தில் மாத்திரம் 20 பேர் படுகொலை!

7 பேர் படுகாயம்; நால்வரே கைது

இலங்கையில் அண்மைக்காலமாக துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடந்த மே 30 ஆம் திகதி முதல் நேற்று (ஜூன் 29) வரை மாத்திரம் 20 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர். மேற்படி சம்பவங்கள் தொடர்பில் இதுவரை நான்கு சந்தேகநபர்கள் மட்டுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் எனவும், அது சம்பந்தமான வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றும் கொழும்பில் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## 726 கைதிகள் தப்பியோட்டம்; ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அத்துடன், மேலும் 127 பேரைத் தேடி தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் ஊடகங்களிடம் இன்று அவர் கூறினார்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு அளிக்கும் கந்தக்காடு முகாமில் நேற்றுமுன்தினம் இரவு இரு குழுவினருக்கிடையில் மோதல் இடம்பெற்றிருந்தது. இதில் அங்கு புனர்வாழ்வு பெற்ற கைதி ஒருவர் சாவடைந்தார்.

இந்தத் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக வெலிக்கந்தை பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த புனர்வாழ்வு நிலையத்துக்குச் சென்றிருந்தபோது, புனர்வாழ்வு பெற்று வந்த 726 கைதிகள் முள்வேலிகளைத் தகர்த்தெறிந்து அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

தப்பிச்சென்றவர்களைக்கைதுசெய்ய முற்பட்டபோது சோமாவதிய - பொலன்னறுவை வீதியின் பெரியாறு பாலத்துக்கு அருகில் அமைதியின்மை ஏற்பட்டது.

தப்பிச் சென்றவர்கள் பாதுகாப்புத் தரப்பினர் மீது கல்வீச்சுத் தாக்குதல்களை நடத்தினர்.

அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

சிலர் மோதலில் பலியானவரின் சடலத்தைப் பெரியாறு பாலத்துக்கு அருகில் வைத்துக் கொண்டு எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஏற்பட்ட அமைதியின்மையைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதையடுத்து அவர்கள் சடலத்தைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவத்தின்போது ஏற்பட்ட மரணம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தப்பிச் சென்ற 726 கைதிகளில் 599 பேர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், ஏனையோரைத் தேடும் நடவடிக்கையைப் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றனர்.

## மஹிந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமூக வலைத்தளங்களில் இன்று காலை பல்வேறு தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், இது தொடர்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகச் செயலாளர் ரொஹான் வெலிவிட்ட, பிரத்தியேகச் செயலாளர் கீத்நாத் காசிலிங்கம் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில், குறித்த தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும், வதந்திகளை நம்பவேண்டாம் என்றும் கூறினர்.

அத்துடன், மஹிந்த ராஜபக்ஷ நலமுடன் இருக்கின்றார் எனவும், தனது அன்றாடப் பணிகளை எந்தவித இடையூறும் இன்றி அவர் மேற்கொண்டு வருகின்றார் எனவும் அவரின் செயலாளர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

## கோட்டா உடனே ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கோட்டாபய ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் வரைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவாலும் ஒன்றும் செய்ய முடியாது. அதனால்தான் பிரதமர் ரணில் நாளாந்தம் ஊடகங்கள் முன்னிலையில் பிரச்சினைகளை மாத்திரம் கூறுகின்றாரே தவிர அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கின்றார் இல்லை.

இலங்கையின் தற்போதைய நிலைமை நாளாந்தம் மோசமடைகின்றது. மக்கள் பொறுமை இழந்துவிட்டார்கள்.

இந்த நாட்டை மீட்க வேண்டுமெனில் ராஜபக்ஷ குடும்பம் கூண்டோடு வீடு செல்ல வேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு விடிவு கிடைக்கும் - என்றார்.

## 3 நாள்கள் மட்டுமே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த பிரேரணையின் பிரகாரம் 5 ஆம் திகதி ஒத்திவைப்பு வேளை விவாதம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக கடந்த வாரம் இரண்டு நாள்கள் மட்டுமே நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றிருந்தன.

## 46 இலங்கையர்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதையடுத்து, அவர்களை விசாரணைக்கு உட்படுத்தி, நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## திருட்டு ஜோடி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் தலைமையக அதிகாரிகள் குழுவால் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸாரின் தகவலின்படி, அப்பகுதியில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டனர் எனச் சந்தேகிக்கப்படும் தம்பதியிடம் இந்தப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கணிணி துணைக்கருவிகள், எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் மின் சாதனங்கள் உட்பட சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஏனைய சந்தேகநபர்களை கைதுசெய்வதற்காகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பதுளை தலைமையகப் பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் பதுளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வாட்டி வதைக்கின்றது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒரு பெண் மற்றும் ஒரு சிறுவனும் உள்ளடங்குகின்றனர்.

## பொலிஸார் ஒருவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்படி முகாமின் ஆயுதக் களஞ்சியப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்த அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

59 வயதான குறித்த உப பொலிஸ் பரிசோதகர், கடுவலை - ஜல்தர பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழப்புக்கான காரணம் இது வரை வெளியவராத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கந்தக்காட்டில் நடந்தது என்ன?

கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் ஏற்பட்ட களேபரம் நாட்டின் சமூகக் கட்டமைப்பு தொடர்பில் பல கேள்விகளையும் எழுப்பி உள்ளது.

போதைவஸ்து, மது போன்ற மதி மயக்கும் தீய பொருள்களின் பாவனையால் சமூகப் பிறழ்வுகள் நேருகின்றன. மனித நடத்தை கோலத்தை சமூக, சமுதாய வாழ்வியலுக்கு ஒவ்வாத வகையில் சீரழிப்பவை இந்தப் போதைப் பொருள்கள்.

அவை தனி மனிதன், குடும்பம், சமூகம் என எல்லா மட்டங்களிலும் குழப்பங்களையும் பெரும் பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன.

இந்தப் போதைப் பாவனை மூலம் தன் சிந்தனையை போதையில் புதைத்து, மன மயக்கத்தையும், மனக் குழப்பத்தையும், மாறாட்டத்தையும், வக்கிர புத்தியையும் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொள்பவன், தன்னையும், தன் குடும்பத்தையும், சுற்றாடலையும், சமூகத்தையும் சீரழிக்கின்றான்.

சமூக ஒழுக்கங்களும், விழுமியங்களும், மாண்புகளும், சுய சிந்தனையில் தொலைந்து, விலங்கு மனப்பான்மையில் மனித நடத்தையை வெளிப்படுத்தச் செய்ய இந்தப் போதைப் பொருள்கள் காரணம்.

இதன் பாவனைக்கு அடிமையாகின்றவன் முதலில் தன்னைக் கெடுத்துத் தொலைக்கிறான். குடும்பத்திலிருந்து முரண் நிலை அடைகிறான். தொடர்ந்து சமூக சீர்கேட்டின் மையமாகின்றான்.

சமூகத்தில் வன்முறைகள், கிரிமினல் குற்றங்கள், சீரழிவுகள், பிறழ்வுகள் வளர்வதற்கும், விழுமியங்கள், உயர் பண்புகள் அருகிப் போவதற்கும் இந்த போதைப் பாவனை பிரதான காரணமாகின்றது.

இதற்கு முழு அடிமையாகின்றவர்களை திருத்துவது, அவர்களின் குற்ற மனப்பான்மையிலிருந்து சமூகத்தை பாதுகாப்பது எல்லாம் நாட்டுக்கும் அரசுக்கும் மக்களுக்கும் சுமைமிக்க கட்டாயங்கள்.

இப்படி போதைப் பாவனைக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளித்து, சாதாரண வாழ்வுக்குத் திருப்புவதற்கும், அவர்களிடமிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்கும் அத்தகைய பாவனையாளர்களை புனர்வாழ்வளித்து, முகாம்களில் வைத்து பேணுவதும் தவிர்க்க முடியாதவையாகும்.

அப்படி கொண்டு வரப்படுபவர்கள் நீதித்துறை அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினரின் காவலில் வைக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்படுகின்றார்கள். அத்தகைய பணிக்கு இராணுவ தரப்பும் உதவுகின்றது.

ஆரம்பத்தில் அத்தகைய போதைப்பொருள் பாவனையில் மூழ்கி விட்டவர்களை அதில் இருந்து மீட்டெடுத்து புனர்வாழ்வு முகாமுக்கு கொண்டு வரும் போது, அவர்களுக்கு சம்பந்தப்பட்ட போதைப் பொருள் கிடைக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இதனால் அவர்கள் மூர்க்கமானவர்களாக – மோசமானவர்களாக – கட்டுப்படுத்த முடியாதவர்களாக – மனித நடத்தைகளுக்கு ஒவ்வாத பண்புகளை வெளிப்படுத்துபவர்களாக அச்சமயத்தில் மாறிவிடுகின்றனர்.

அத்தகையோக்குப் புனர்வாழ்வளிப்பதும், அவர்களை சமூகத்தில் இணையத்தக்க நற்பிரஜைகளாக மாற்றுவதும் – ஏன் அவர்களைத் தடுத்து வைத்துப் பராமரிப்பதும் கூட – மிகச் சிக்கலான, இக்கட்டான, இமாலயப் பணி.

அந்த விடயத்தை அதில் தேர்ந்த தரப்பினர்தான் கையாள முடியும். கண்ணை மூடிக்கொண்டு இராணுவத்தினரிடம் அதை ஒப்படைக்க முடியாது; ஒப்படைக்கவும் கூடாது.

கந்தக் காட்டில் புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் தடுப்புக் காவல் கைதிகளை இராணுவத்தினர் கையாண்ட விதத்தில் ஒருவர் கொல்லப்பட்டமையே அங்கு செவ்வாய் இரவு வெடித்த கலவரங்களுக்குக் காரணம் என்கின்றார்கள். முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதுடன் மீண்டும் இத்தகைய மோசமான நிகழ்வுகள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

# இந்தியாவிலிருந்து பொருள்களை கொண்டுவர நாணய மாற்று விடயத்தில் மாத்திரமே சிக்கல்!

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்




இந்தியாவிலிருந்து பொருள்களைக் கொண்டு வருவதற்கு நாணய மாற்று விடயத்தில் மாத்திரமே சிக்கல் காணப்படுவதாகவும், பொருள்களை ஏற்றி வர படகுகள் தயாராக உள்ளன என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் பற்றாக்குறை நாட்டில் நிலவுவதால், அத்தியாவசிய தேவைகளை முன்னெடுப்பது என்ற தீர்மானம் அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

வரவிருக்கும் 10 ஆம் திகதிக்கு பின்னர் வழமைக்கு திரும்பிவிடும் எனும் அடிப்படையில்தான் அந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நான் கூறிவருவது போன்று இந்தியாவிலிருந்து அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்வதன் ஊடாக வடக்கு மாகாணம் அதற்கு மேலாக வடமத்திய மாகாணம் நன்மையை பெறும். அது விரைவில் நடைபெறும் என நம்புகிறேன். – எனத் தெரிவித்தார்.

# யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக சிலர் போராட்டம்!




தமக்கு பெற்றோலை வழங்க கோரி யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக சிலர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ளஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டோக்கன் பெற்றவர்களுக்கு பெற்றோல் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டமையால் நேற்று (புதன்கிழமை) அதிகாலை தொடக்கம் பலர் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இந்நிலையில் காலை 9 மணி போல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்கே எரிபொருள் வழங்கப்படும் என அறிவித்தமையால் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்றபட்டது.

அதனை அடுத்து வரிசையில் காத்திருந்த பலரும் மாவட்ட செயலகம் முன் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன் போது அங்கு வந்திருந்த பொலிஸாரிடம் 'ஐ. ஓ. சி. பெற்றோல் நிரப்பு நிலையத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொது மக்களுக்கான பெற்றோல் வழங்கப்படும் என ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தமையை அடுத்தே நாம் பெற்றோலை பெற நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தோம்' என கூறி பத்திரிகை செய்திகளை பொலிஸாரிடம் காட்டினார்கள்.

அதேவேளை போராட்டம் நடத்தினவர்களுடன் மேலதிக மாவட்ட செயலர் ம. பிரதீபன் பேச்சு நடத்திய போது, அத்தியாவசிய சேவையாளர்களுக்கு தான் எரிபொருள் விநியோகிக்க சொல்லி எமக்கு அறிவுறுத்தப்பட்டமைக்கு அமையவே தாம் எரிபொருள் நிரப்பு நிலையத்தினருக்கு அவ்வாறு அறிவுறுத்தினோம். – எனத் தெரிவித்தார்.

# இலங்கை பொருளாதாரம் 1.6 சதவீதத்தால் வீழ்ச்சி!

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 1.6 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரங்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 1.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 2021ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 4 நேர் சதவீதமாக காணப்பட்ட பொருளதார வளர்ச்சி வீதம், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 1.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

பணவீக்கம், அந்நிய செலாவணி மதிப்பிழப்பு, டொலர் பற்றாக்குறை போன்ற பாதகமான காரணம் காரணமாக பொருளாதார வளர்ச்சி வீதம் குறைவடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது

# நாடாளுமன்ற இணையத்தளத்தில் இருந்து எம்.பிக்களின் முகவரிகள் நீக்கப்பட்டன!

இலங்கை நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து தற்போது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் முகவரிகளும் நீக்கப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நாடாளுமன்றத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தற்போது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 உறுப்பினர்களின் கைபேசி இலக்கங்கள் மற்றும் கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் உள்ள அவர்களது வசிப்பிடங்களின் முகவரிகள் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டிருந்தன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைனில் பல்பொருள் அங்காடி மீது ஏவுகணை தாக்குதல் நடத்திய புடின் ஒரு பயங்கரவாதி என்கிறார் ஜெலன்ஸ்கி

உக்ரைனின் கிரெமன்சுக் நகரத்தின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்திய ரஷ்ய அதிபர் புடின் ஒரு பயங்கரவாதி என ஜெலன்ஸ்கி குற்றம்சாட்டியுள்ளார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்தபோது அங்காடி மீது ரஷ்யா குண்டு வீசியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. ரஷ்ய போர் விமானங்கள் பல்பொருள் அங்காடி மீது குண்டு வீசியதால் அதை பயங்கரவாத நாடாக அறிவிக்க வேண்டும் என உக்ரைன் அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். ஐக்கிய நாடுகள் மன்றத்தில் இருந்து ரஷ்யாவை வெளியேற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இதனிடையே மத்திய உக்ரைனில் பல்பொருள் அங்காடி மீது ரஷ்யா குண்டுவீசி தாக்கியதில் ஏராளமானோரை காணவில்லை என புகார் எழுந்துள்ளது.

2 நாள்களுக்கு முன் கிரெமன்சுக்கின் உள்ள பல்பொருள் அங்காடி மீது ஏவுகணைகளால் தாக்கியதில் 18 பேர் உயிரிழந்தனர். எனினும் தங்கள் விமானங்கள் குண்டு வீசி தாக்கிய பல் பொருள் அங்காடி காலியாக இருந்ததாக ரஷ்ய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ரஷ்ய போர் விமானம் வீசிய ஏவுகணை அங்காடி அருகே உள்ள ஆயுதக் கிடங்கையே தாக்கியதாக ரஷ்யா விளக்கம் அளித்துள்ளது. கிழக்கு உக்ரைனில் உள்ள லிசிசான்ஸ் நகரில் நிலைமை மோசமாக உள்ளதாக பிராந்திய ஆளுநர் கூறியுள்ளார்.



## 27 ஆண்டுகளாக விடுமுறை எடுக்காமல் பணியாற்றிய தந்தைக்கு 1 கோடி ரூபா நிதி திரட்டிய அன்பு மகள்




அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் மெக்கரன் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பர்கர் கிங்கில் சமையல்காரராகவும் காசாளராகவும் 27 ஆண்டுகளாக ஒரு நாள் தவறாமல் பணியாற்றியுள்ளார் போர்டு என்ற மனிதர். 'பர்கர் கிங்' என்ற நிறுவனத்தின் ஊழியரான கெவின் போர்டு என்பவர், தான் பணிபுரிந்த 27 வருடங்களில் ஒரு நாள் கூட விடுமுறை எடுக்காமல் சென்றமை குறிப்பிடத்தக்கது.

கெவின் போர்டின் மகள் செரினா, தனது தந்தைக்காக ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணி, தன் தந்தை 27 வருடங்களில் ஒரு நாள் கூட விடுமுறை எடுக்காமல் சென்றார் என்ற விடயத்தை தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டார். தன்னுடைய தந்தைக்கு தக்க பரிசு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இத்தகைய செயலில் அவர் ஈடுபட்டார்.

27 வருடங்களாக தன்னையும், தனது மூத்த சகோதரியையும் நன்றாக பார்த்து கொண்ட தனது தந்தைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த நிதி திரட்டும் செயலில் ஈடுபட்டேன் என மகள் செரீனா 'கோ-பண்ட்-மீ' பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மகள் வெளியிட்ட பதிவை பார்த்த நெட்டிசன்கள் பலர் போட்டி போட்டுக் கொண்டு கெவின் போர்டுக்கு பணத்தை அள்ளி வழங்கினர். 'கோ-பண்ட்-மீ' என்ற அமைப்பின் மூலம் செரினா இந்த தொகையை திரட்டினார். இவர்களை தொடர்ந்து, பிரபல நகைச்சுவை நடிகர் டேவிட் ஸ்பேட் என்பவர் 5,000 டொலர் பணம் கொடுத்தார் என தெரிகிறது.

கெவின் போர்டின் சேவையைப் பாராட்டி நெட்டிசன்கள் தாராளமாக நன்கொடை அளித்ததில் ரூ.1 கோடி வரை சேர்ந்து விட்டதை கண்டு அதிர்ச்சியடைந்த மகள் செரினா மிகுந்த உணர்ச்சிவசப்பட்டார்.

அவருடைய 27 வருடங்களில் ஒரு நாள் கூட லீவு போடாமல் சென்றதற்கு அவரது நிறுவனம் ஒரு சிறிய பரிசு கொடுத்த நிலையில், நெட்டிசன்கள் அவரது உழைப்பை பாராட்டி ரூ.1 கோடிக்கும் மேல் நிதி திரட்டப்பட்டுள்ள சம்பவம் காண்போரை ஆசிரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

## பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை கடத்தும் தலிபான்கள்

கடந்த 2021 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்கப் படைகள் வெளியேறிய நிலையில், அந்த படைகள் விட்டுச் சென்ற பெரும்பாலான ராணுவ உபகரணங்கள் மற்றும் துப்பாக்கிகள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்கள் தலிபான்களின் கைகளில் சிக்கின. இதேபோல் தப்பியோடிய ஆப்கானிஸ்தான் படைகளும் விட்டுச் சென்ற அமெரிக்கா தயாரிப்பு ஆயுதங்கள் மற்றும் ராணுவ உபகரணங்கள் தலிபான்கள் கைப்பற்றினர். இந்த ஆயுதங்களை பாகிஸ்தானுக்கு கடத்தும் தலிபான்கள், துப்பாக்கி வியாபாரிகளிடம் விற்பனை செய்கின்றனர். அவற்றை எல்லைப்பகுதி சந்தைகளில் வெளிப்படையாக வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர் என ஆப்கானிஸ்தான் உள்ளூர் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.



பழங்கள் மற்றும் காய்கறிகளை ஏற்றிச் செல்லும் லொறிகள் மூலம் பாகிஸ்தானுக்குள் ஆயுதங்கள் கடத்தப்படுகின்றன எனவும் கூறப்பட்டுள்ளது. இதற்கிடையில், தெற்கு கந்தஹார் மாகாணத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு டஜன் துப்பாக்கிகள் மற்றும் வெடி மருந்துகளை தலிபான் பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்தனர். மீட்கப்பட்ட துப்பாக்கிகளில் மொத்தம் 6 ஏகே 47, 13 கைத்துப்பாக்கிகள், ஆயிரக்கணக்கான தோட்டாக்கள் மற்றும் ரொக்கெட் மூலம் இயக்கப்படும் கையெறி குண்டுகள் உள்ளிட்டவை அடங்கும். இது தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டனர் என ஆப்கான் மூத்த பொலிஸ் அதிகாரி முல்லா அப்துல் கானி தெரிவித்தார்.

### பாலியல் வழக்கில்

## பிரபல பாப் பாடகர் கெல்லிக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை



பாலியல் குற்ற வழக்கில், அமெரிக்காவைச் சேர்ந்த பாப் பாடகர் கெல்லிக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. I Believe I Can Fly என்பது உள்ளிட்ட பிரபல பாடல்களை பாடிய பாப் பாடகர் ஆர்.கெல்லி, பல பெண்களையும், சிறுமிகளையும் பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என கைது செய்யப்பட்டார்.

9 மாதங்களுக்கு முன்பு அவர் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்ட நிலையில், தற்போது அவருக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## ஹிட்லர் படையில் பணியாற்றிய முதியவருக்கு 5 ஆண்டுகள் சிறை

### ஜேர்மனி நீதிமன்றம் தீர்ப்பு



2ம் உலகப்போரின்போது ஹிட்லரின் நாஜி படைகள், ஜேர்மனி தலைநகர் பெர்லின் அருகே வதை முகாம் அமைக்க 2 லட்சத்துக்கு மேலான கைதிகளை அடைத்தனர். இதில் ஆயிரக்கணக்கானோரை தண்டனைகள் மூலம் கொன்றனர். நாஜி படை காலத்தில் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் மீது தற்போதைய ஜேர்மனி அரசு விசாரணை நடத்தி வருகிறது. இதில் நாஜி வதை முகாமில் காவலராக பணியாற்றிய 101 வயது முதியவர் ஜோசப் ஷிட்சுக்கு எதிராக கடந்த ஆண்டு விசாரணை தொடங்கப்பட்டது. அவர் 1942-1945ம் ஆண்டுகள் இடையேயான காலகட்டத்தில் பெர்லினில் உள்ள வதை முகாமில் 3,518 கைதிகளை கொலை செய்ய உதவினார் என குற்றம் சாட்டப்பட்டது.

இந்த சம்பவங்கள் நடந்த போது ஜோசப் ஷிட்சுக்கு 21 வயது. இவ்வழக்கில் அவருக்கு 5 ஆண்டுகள் ஜெயில் தண்டனை விதித்து ஜேர்மனி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

# உத்தவ் தாக்கரே ராஜினாமா பா.ஜ.கவினர் கொண்டாட்டம்

மகாராஷ்டிராவில் ஆளும் சிவசேனாவின் 39 எம்.எல்.ஏக்கள் முதல்வர் உத்தவ் தாக்கரேவுக்கு எதிராக அணி திரண்டுள்ளனர். இதனால் ஆட்சியில் இருப்பதற்கான பெரும்பான்மையை சிவசேனா இழந்தது. இதையடுத்து, முக்கிய எதிர்க்கட்சியான பா.ஜ.கவின் பரிந்துரையின் பேரில் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு அந்த மாநில ஆளுநர் கோஷ்யாரி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவுக்கு எதிராக சிவசேனா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டது. 16 அதிருப்தி எம்.எல்.ஏக்களை தகுதி நீக்கக் கோரும் விவகாரம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது பெரும்பான்மையை நிரூபிக்க ஆளுநரால் உத்தரவிட முடியாது என அக்கட்சி வாதிட்டது. ஆனால், சிவசேனாவின் மனுவை நிராகரித்த உச்ச நீதிமன்றம், சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தக் கோரும் ஆளுநரின் உத்தரவை உறுதி செய்தது.

நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி அடைவது உறுதியாகிவிட்டதால், உத்தவ் தாக்கரே நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனைத் தொடர்ந்து, மகாராஷ்டிரா முழுவதும் பா.ஜ.கவினர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சிவசேனா அதிருப்தி எம்.எல். ஏக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைக்க உரிமை கோர பா.ஜ.க. திட்டமிட்டிருக்கிறது.

பா.ஜ.க. சார்பில் அதன் மூத்த தலைவரான தேவேந்திர பட்னாவிஸ் முதல்வராக தேர்ந்தெடுக்கப்படுவார் என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் மாநிலம் எங்கும் உள்ள பா.ஜ.க. அலுவலகங்களுக்கு முன்பு தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகளை வழங்கியும் கொண்டாடி வருகின்றனர்.



இதனிடையே, பட்னாவிஸ் நேற்று இரவு ஒரு வீடியோ பதிவை வெளியிட்டுள்ளார். அதில், நான் மீண்டும் வருவேன். புதிய மகாராஷ்டிராவை உருவாக்க நான் மீண்டும் வருவேன், என அவர் கூறியிருக்கிறார்.

## குருமூர்த்தி போல எல்லா பிராமணர்களும் கோழைகள் அல்லவென சுப்ரமணிய சுவாமி டுவிட்



தி.மு.கவின் செய்தித் தொடர்பாளர் ராஜீவ் காந்திக்கு எதிராக வழக்குத் தொடர அனுமதி கோரி சுப்ரமணியசுவாமி, ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தை டுவிட்டரில் பகிர்ந்துள்ள அவர், குருமூர்த்தி போல எல்லா பிராமணர்களும் கோழைகள் அல்ல,என்று குறிப்பிட்டுள்ளமை சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 196 இன் கீழ் வழக்குத் தொடர அனுமதி கோரியுள்ள பா.ஜ.க. எம்.பி. சுப்ரமணிய சுவாமி, குறித்த கடிதத்தில், தி.மு.கவின் செயலாளரும் செய்தித் தொடர்பாளருமான ஆர்.ராஜீவ் காந்திக்கு எதிராக நான் தாக்கல் செய்ய உள்ள எனது குற்றப் புகாரை இத்துடன் இணைத்துள்ளேன். இந்தப் புகாரைத் தாக்கல் செய்வதற்கு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 இன் பிரிவு 196 இன் கீழ் உங்கள் அனுமதி தேவைப்படுகிறது.

2022 ஜூன் 3 ஆம் திகதி தமிழ்ப் பிராமணர்களை இனப் படுகொலை செய்ய வேண்டும், என்று தனது டுவிட்டர் கணக்கில் விளம்பரப்படுத்தியதன் மூலம், தான்சம்பந்தப்பட்டுள்ள கிரிமினல் புகாரில் உள்ளபடி, இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பல்வேறு குற்றங்களைச் செய்துள்ளார் என்பது வெளிப்படையாகியுள்ளது.

எனவே, பொது அமைதியைக் குலைக்கும் வகையில், நீதியின் நலன் கருதி, உங்கள் அரசியலமைப்புச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி, மேற்படி புகாரில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடர, தயவுசெய்து அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன், என்று ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்

இந்தக் கடிதத்தை டுவிட்டரில் பகிர்ந்துள்ள சுப்ரமணிய சுவாமி, அப்பதிவில் திரு. ஸ்டாலின் அவர்களே, பிராமணர்களிடையே கடினமான மனிதர்கள் இருக்கிறார்கள் என்று ராஜீவ் காந்தியிடம் சொல்லுங்கள். குருமூர்த்தி போல் அனைவரும் கோழைகள் அல்ல, என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உதய்ப்பூர் கொலையாளிகளுக்கு பாகிஸ்தான் அமைப்புடன் தொடர்பு



ராஜஸ்தான் மாநிலத்தின் உதய்ப்பூர் நகரில் தையல் கடை நடத்தி வந்த கன்னையா லால் என்பவரை நேற்று முன்தினம் இரண்டு பேர் கழுத்தை அறுத்து கொடூரமாக கொலை செய்தனர். அந்தச் செயலின் வீடியோவையும் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டனர். இந்த சம்பவம் ராஜஸ்தான் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதுமே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

முகமது நபி குறித்து அவதூறாக பேசிய பா.ஜ.க. நிர்வாகியான நுபுர் சர்மாவுக்கு ஆதரவாக கன்னையாலால் கருத்துத் தெரிவித்து வந்தமையால், அவரை தாங்கள் கொலை செய்தோம் என அந்த நபர்கள் இருவரும் வீடியோவில் கூறி யிருந்தனர்.

கன்னையா லாலின் கொலையை கண்டித்து ராஜஸ்தானில் பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெற்றன. இதனிடையே, தலைமறைவாகி இருந்த கொலையாளிகள் கவுஸ் முகமது, முகமது ரியாஸ் ஆகிய இருவரையும் பொலிஸார் நேற்று கைது செய்தனர். இந்தச் சூழலில், கன்னையாலாலை அவர்கள் கொலை செய்த பாணி, ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் ஒத்துப்போவதாக இந்திய உளவுத்துறைகள் தெரிவித்தன. இதையடுத்து, இந்த வழக்கு தொடர்பாக இத்திய தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ) தனியாக விசாரணை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில், கொலையாளிகளில் ஒருவர், பாகிஸ்தானில் செயல்படும் தவாத் இ இஸ்லாமி என்ற அமைப்புடன் தொடர்பில் இருந்தமை என்.ஐ.ஏ. விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அந்த நபர், 2014 ஆம் ஆண்டு கராச்சியில் உள்ள அந்த இயக்கத்தின் தலைமையகத்துக்கு சென்று வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே அந்த இயக்கத்தின் உத்தரவின் பேரில் கன்னையாலாலை அவர்கள் கொலை செய்தார்களா, இதற்கு முன்பு அவர்கள் வேறு ஏதேனும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களா? என்பது குறித்தும் தீவிர விசாரணை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## தன்னின சேர்க்கைக்கு மறுத்தவர் கொலை; இளைஞரின் ஆயுள் தண்டனை ரத்து

தன்னினச்சேர்க்கைக்கு மறுத்த நண்பனை கொலை செய்த குற்றச்சாட்டில் இளைஞருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை ரத்துச் செய்யப்பட்டது. கடலூர் மாவட்டம் தேவனாம்பட்டினம் பகுதியைச் சேர்ந்த சதீஷ்குமரன் என்ற வாலிபர், தனது நண்பர் தினேஷைச் சந்திக்கச் செல்கிறேன் என கூறி கடந்த 2016ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி வீட்டை விட்டுச் சென்றுள் ளார். அவர் வீடு திரும்பாதமையால், சதீஷ்குமரனின் தந்தை சத்தியமூர்த்தி, நெல்லிக்குப்பம் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

இது சம்பந்தமாக பொலிஸார் விசாரணை நடத்தி வந்த நிலையில், 2016 ஏப்ரல் 12ஆம் திகதி தேவனாம்பட்டினம் கிராம நிர்வாக அலுவலர் முன் சரணடைந்த தினேஷ், ஓரினச் சேர்க்கைக்கு அழைத்தபோது அதை சதீஷ்குமரன் மறுத்தார் எனவும், இந்த விடயத்தை அவர் வெளியில் சொன்னால் அவமானம் என்பதால், கத்தியால் குத்தி கொலை செய்து வீட்டின் பின்புறம் புதைத்து விட்டேன் எனவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகக் கூறப்பட்டது.

அதன் அடிப்படையில் தினேஷுக்கு எதிராக பதியப்பட்ட கொலை வழக்கை விசாரித்த கடலூர் முதன்மை அமர்வு நீதிமன்றம், தினேஷுக்கு ஆயுள் தண்டனை விதித்து 2018 ஒக்டோபர் 30 இல் தீர்ப்பளித்தது. தீர்ப்பை எதிர்த்து தினேஷ் தாக்கல் செய்த மேல் முறையீட்டு வழக்கை விசாரித்த நீதிபதிகள் பரேஷ் உபாத்யாய் மற்றும் ஜெகதீஷ் சந்திரா அமர்வு, ஒப்புதல் வாக்குமூலத்தையும், ஆயுதம் கைப்பற்றியதையும் நம்ப மறுப்பதாக தெரிவித்தது.

சதீஷ்குமரனின் உடல் தினேஷின் வீட்டின் பின்புறம் புதைக்கப்பட்டதை மட்டும் வைத்து தண்டனை வழங்கியுள்ளதாகவும், சதீஷ்குமரனின் காதல் விவகாரம் குறித்து விசாரிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

பாடசாலைக்காலத்தில் இருந்து சதீஷ்குமரனும், தினேஷும் நண்பர்களாக இருந்ததுடன், இருவரும் சில காலம் சென்னையில் ஒரே அறையில் தங்கியிருந்துள்ளனர் என்பதையும் நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர். பொலிஸ் தரப்பு வாதத்தின்படி தினேஷுக்கு தன் பாலின சேர்க்கைப் பழக்கம் இருந்திருந்தால் இருவரின் நட்பு நீடித்திருக்காது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விசாரணையில் பல குறைபாடுகள் உள்ளன எனச் சுட்டிக்காட்டிய நீதிபதிகள், தினேஷுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை ரத்துச் செய்து, அவர் வேறு வழக்கில் குற்றவாளி இல்லை என்றால் விடுதலை செய்யவும் உத்தரவிட்டுள்ளனர்.



## கழகத்தைக் காத்திட கட்சி அலுவலகம் வருக! சசிகலாவை வரவேற்கும் சுவரொட்டிகள்

அ.தி.மு.கவில் யார் தலைமை? என உட்கட்சி பிரச்சினை உச்சத்தில் இருந்து வருகிறது. ஏற்கனவே ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். அணி யுத்தத்தில் இருக்கும்நிலையில், தொண்டர்களை சந்திக்க சசிகலா சுற்றுப் பயணத்தைத் தொடங்கி இருக்கிறார்.




இந்த நிலையில், அ.தி.மு.க. தொண்டர்களின் நம்பிக்கை நட்சத்திரம், கட்சியின் பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களே, கழகத்தை காத்திட எங்களை வழிநடத்திட கட்சி அலுவலகத்திற்கு வருக வருக!, என சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்ட நிர்வாகிகள் சார்பில் ராயப்பேட்டை அ.தி.மு.க. தலைமை அலுவலகம் அருகே ஒட்டப்பட்டுள்ள இந்த சுவரொட்டியால் தொண்டர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## அக்கரைப்பற்றில் டெங்கு ஒழிப்பு தீவிரம்

# சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டும் திருந்தாதோர் மீது வழக்குத் தாக்கல்



அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை வைத்திருந்து துப்புரவு செய்யுமாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தும், அதனை மீறியபவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எவ்.எம்.ஏ. காதர் நேற்றுத் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட டெங்கொழிப்பு செயலணியினர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கொழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். டெங்கொழிப்பு தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

டெங்கொழிப்பு பரிசோதனையின் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்து துப்புரவு செய்யுமாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தும், அதனை மீறியபவர்களுக்கெதிராகவே வழக் குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுற்றுப்புறத்தில் தேங்கும் நீர் நிலைகளைக் கண்டறிந்து அவற்றை வெறுமைப்படுத்துதல் அல்லது நீர் தேங்கி உள்ள அத்தகைய இடங்களில் பூச்சி கொல்லி மருந்துகளைத் தெளித்தல், உயிரியற் கட்டுப்பாட்டுக் காரணிகளை இடல் போன்றன நுளம்புகளின் பெருக்கத்தைத் தடுக்கின்றது.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றிடெங்குநுளம்புகள்பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாகத் தமது இடங்களை வைத்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். தென்னம் குரும்பை, யோகட் கப், வெற்று போத்தல்கள், வெற்று ரயர்கள், பொலித்தீன் கழிவுகள் போன்ற கழிவுகளை முறையாக அகற்ற வேண்டுமெனவும் அவர் கூறினார்.

பொதுமக்கள் வாரத்தில் ஒரு நாள் தங்களது வீடுகளையும் சுற்றுப்புறச் சுழலையும் துப்புரவு செய்ய வேண்டுமெனவும், டெங்கொழிப்புத் தொடர்பான ஆலோசனைகள் தேவைப்படும் பட்சத்தில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

# கிழக்கில் அடுத்த வாரம் 3 தினங்கள் பாடசாலை

## கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனை

( காரைதீவு நிருபர் சகா)

சமகால எரிபொருள் பற்றாக்குறை பிரச்சினை காரணமாக,கிழக்கு மாகாணத்தில் அடுத்த வாரம் மூன்று தினங்கள் பாடசாலைகளை நடத்துவது என்று முடிவாகி இருக்கின்றது.

திங்கள், வெள்ளி தவிர்ந்த செவ்வாய், புதன், வியாழக்கிழமை ஆகிய இடை மூன்று நாள்களிலும் பாடசாலைகள் முழு அளவில் நடைபெறும்.

இந்த ஆலோசனையை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் முன்வைத்தார்.

கிழக்கு மாகாண கல்வி செயலாளர், மாகாண கல்வி பணிப்பாளர் ,வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருடனான 'சூம்' தொழில்நுட்ப கூட்டத்தில் ஆளுநர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அவரவர் வலய புலனக் குழுவில் வாட்ஸ்அப் குழுமத்தில் அதிபர் ஆசிரியர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

செவ்வாய் புதன்,வியாழக்கிழமை நாள்களிலே ஆசிரியர்களை முழுமையாக வரவைத்து, முழு நேரசூசி வழங்கி, மாணவர்களை முழுமையாக வரவழைத்து, முழு அளவிலான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதற்கு பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சில பிழையான வழிநடத்தல்களை முன்னெடுக்க திட்டமிட்டு இருக்கின்றன, அதனைப் பொருட்படுத்தாமல் அதிபர்களும் ஆசிரியர்களும் இந்த விடயத்திலே ஒத்துழைக்க வேண்டும்.

முடியுமானால் மூன்று மாவட்ட அரசாங்க அதிபர்களுடனும் பேசி எரிபொருள் பிரச்சனையை தீர்ப்பதற்கு உதவுவதாக ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்து சபையின் உயர் அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். போக்குவரத்துப் பிரச்சினை உள்ள பாடசாலைகளுக்கு பொதுப் போக்குவரத்து நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது .வருகின்ற ஜூலை மாதம் திங்கட்கிழமை நான்காம் திகதி தொடக்கம் வெள்ளிக்கிழமை 8 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இந்த மூன்று நாள் பாடசாலை இடம்பெறும்.

அதன் பின்பு எவ்வாறு பாடசாலையை நடத்துவது என்று பின்னர் விரிவாக அறிவிக்கப்படும் என்று அந்த கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

## முன்பள்ளியிலிருந்து பாடசாலைக்குச் செல்லும்

# சிறார்களின் கல்வி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்





(க.கிருபாகரன்)

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் சிறுவர் செயலகத்தினால் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'முன்பள்ளிப் பிள்ளைகள் ஆரம்ப பாடசாலைக்கு நுழைதலை இலகுபடுத்தல் தொடர்பான விழிப்புணர்வு' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செயலமர்வு நேற்று ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி இஸ்மாலெவ்வை நபீலாவின் ஒழுங்கமைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் விழிப்புணர்வுச் செயலமர்விற்கு வளவாளர்களாக மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலக முன்பிள்ளைப்பருவ பராமரிப்புக்கும் அபிவிருத்திக்கும் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் முத்துராஜா புவிராஜா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் வீரக்குட்டி முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் அரச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி பிள்ளைகளின் பெற்றோர்கள் என சுமார் 70 பேர் கலந்துகொண்டு, தாங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான கருத்துக்களை குழுவாக முன்வைத்தனர்.

இதன்போது இச்சவால்களை எதிர்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பான விடயங்களை வளவாளர்கள் பங்குபற்றுநர்களுக்கு தெளிவூட்டினர்.

# பாக்.புலமைப்பரிசிலுக்கான தேர்வுப் பரீட்சை கிழக்கிலும்

(நூருள் ஹுதா உமர்)

பாகிஸ்தான் அரசினால் வழங்கப்படும் அல்லமா இக்பால் புலமைப்பரிசில் பெற தகுதியானவர்களை தெரிவுசெய்ய நடத்தப்படும் எழுத்துப்பரீட்சை நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர் முனீரா பாலிஹா மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

பாகிஸ்தான் பல்கலைக்கழகத்தில் மருத்துவம், பொறியியல், தொழிநுட்பம் போன்ற துறைகளில் கல்வி பயில இதன் மூலம் வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும், இதற்கான முழுச் செலவுகளும் பாகிஸ்தான் அரசினால் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் இலங்கையின் பல்லினங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் கடந்த காலங்களில் பயன் பெற்றுள்ளனர் என பாகிஸ்தான் தூதரக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு, குருநாகல், கண்டி போன்ற நகரங்களில் மட்டுமே இடம்பெற்றுவந்த இந்தத் தேர்வு வழமைக்கு மாறாக கடந்த ஆண்டு முதல் கிழக்கிலும் பாகிஸ்தான் உயர்கல்வி ஆணைய உயரதிகாரிகள் மற்றும் தூதரக அதிகாரிகளினால் நேரடியாக நடத்தப்படுகிறது.

இந்த பரீட்சையில் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 150 பேரளவில் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வில் பாகிஸ்தான் உயஸ்தானிகரக உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.









# யாழில் இருந்து வந்து கிளிநொச்சியில் பஸ் இன்றி காத்திருக்கும் ஆசிரியர்கள்!

யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு பஸ்களை பிடித்து கிளிநொச்சிக்கு வருகை தந்தும் கிளிநொச்சியிலிருந்து தங்களது கிராம பாடசாலைகளுக்கு செல்வதற்கு பஸ்கள் இன்றி நீண்ட நேரம் டிப்போச் சந்தியில் ஆசிரியர்கள் காத்திருக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது என பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து வீட்டுப் பணிகளை முடித்துவிட்டு அங்கிருந்து பிரதான வீதிக்கோ அல்லது யாழ் நகருக்கோ ஒரு பஸ்ஸில் பயணம் செய்து அங்கிருந்து கிளிநொச்சிக்கு பிறிதொரு பஸ்ஸில் பயணத்தை மேற்கொண்டு வருகைதந்த போதும் கிளிநொச்சியின் கிராமங்களில் உள்ள தங்களது பாடசாலைகளுக்குரிய நேரத்திற்குச் செல்வதற்கு பஸ்கள் இன்மையால் காலை ஒன்பது மணிவரை வீதியில் காத்திருக்கிறோம் என ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலையினர் தங்கள் பணியாளர்களுக்கான எரிபொருள் கோரி பணி பகிஷ்கரிப்பில், ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை தனியார் பஸ்கள் போதிய எரிபொருள் இன்றி தங்களது சேவையை மட்டுப்படுத்தியுள்ளன. இதன் காரணமாக தாம் உரிய நேரத்துக்கு பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகளில் தினவரவை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் அடையாள இயந்திர பயன்பாடு இருப்பதால் தாமதமாகி செல்கின்ற போது சில வேலைகளில் அரைநாள் கடமையாக பதியப்படுகின்றன. மாணவர்கள் முதல் பாடவேளையை வெறுமையாகக் கழிக்கின்றனர் எனத் தெரிவித்துள்ள ஆசிரியர்கள் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விமானங்களுக்கான எரிபொருள் இறக்குமதி செய்வதற்குத் தனியார் துறைக்கு அனுமதி

விமானங்களுக்கான எரிபொருளை இறக்குமதிசெய்வதற்கு தனியார் துறைக்கு அனுமதி வழங்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, விமான நிறுவன பிரதிநிதிகள் மற்றும் நாட்டிலுள்ள எரிபொருள் சேமிப்பக செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

விமானங்களுக்கான எரிபொருளை இலங்கைக்கு இறக்குமதி செய்ய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மாத்திரமே இதுவரையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் டொலர் நெருக்கடி காரணமாக நாட்டுக்கு விமானங்களுக்கான எரிபொருளை இறக்குமதி செய்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

எனவே விமானங்களுக்கான எரிபொருளை நாட்டுக்கு இறக்குமதி செய்ய தனியார் துறையை அனுமதிக்கும்வகையில் சட்டங்கள் திருத்தப்பட்டால், தங்கள் முழு ஆதரவையும் வழங்கவுள்ளதாக எரிபொருள் சேமிப்பக செயற்பாட்டாளர்கள் அமைச்சருக்கு அறிவித்துள்ளனர். இந்த நடவடிக்கைக்கு ஆதர வளிக்குமாறு இலங்கையில் உள்ள விமானப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தம்!

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. நேற்று (புதன்கிழமை) முதல் மறு அறிவித் தல் வரை கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுகின்றன என பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்ன சேகர தெரிவித்துள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வாகன வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு கால அவகாசம்!

### மேல்மாகாணத்துக்கு வழங்கப்பட்டது

மேல்மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு வாகன வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜுலை மாதம் 29 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படும் என மேல்மாகாண பிரதம செயலாளர் ஜெயந்தி விஜேதுங்க வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதிக்குள் அபராதம் விதிக்கப்பட மாட்டாது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீட்டுப் பிரசவங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கடந்த சில நாள்களாக நாட்டின் சில பகுதிகளில் வீட்டுப் பிரசவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அரச குடும்ப சுகாதார சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி, பொருளாதார நெருக்கடிகள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு செல்வதில் உள்ள சிரமம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

நிக்கவெரட்டிய, புறக்கோட்டை, மோதர உள்ளிட்ட பல பிரதேசங்களில் கடந்த இரண்டு நாள்களாக இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எவ்வாறாயினும், குடும்ப சுகாதார ஊழியர்களின் உதவியுடன் பிரசவங்கள் மேற்கொள்ளப்பட்டதால், குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் நலமுடன் இருக்கின்றனர் என அரச குடும்ப சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவி தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

## பிறப்பு, திருமணம், இறப்புச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டது!

பிறப்பு, திருமணம், இறப்பு மற்றும் காணிச் சான்றிதழ்களை வழங்குவதை பதிவாளர் நாயகம் திணைக்களம் வாரத்துக்கு இரண்டு நாள்களுக்கு மட்டுப் படுத்தியுள்ளது.

அனைத்து பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட பதிவாளர் பிரிவுகளால் வழங்கப்படும் சேவைகள் திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் மட்டுமே வழங்கப்படும் என பதிவாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சேவைகள் காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை மட்டுமே கிடைக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், திணைக்களத்தின் பத்தரமுல்ல, குருநாகல், கண்டி, மாத்தறை ஆகிய பிரதேச செயலகங்களின் மாவட்ட பதிவாளர் பிரிவுகளும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கிளை அலுவலகங்களும் வழமை போன்று வாரத்தில் 5 நாள்கள் திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.06.2022இல் வெளியிடப்பெற்றது.